# தீ விபத்திற்குப் பின்னர்: உங்களுடைய தனிப்பட்ட பாதுகாப்புத் தொகுதியைப் பாவித்தல்

சமூகத் தகவல்

பாதுகாப்புத் தொகுதிகள் தீயால் பாதிக்கப்பட்ட சொத்துகளுக்குத் திரும்பி வருகின்ற மக்களுக்கானவை. அவை மேலதிக முகமூடிகள், உபயோகித்த பிறகு எறியக்கூடிய உடலை முழுதும் மூடும் ஆடைகள் மற்றும் வலிமையான கையுறைகள் முதலியவற்றுடன் சேர்ந்து, உங்களுடைய உள்ளூராட்சிச் சபை அல்லது அவசரநிலை மீட்பு மையத்தில் கிடைக்கின்றன.

**தொகுதிகளை சொத்தை ஆய்வுகள் செய்யும் போது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

**அவை அஸ்பெஸ்ரொஸ் அகற்றுவதற்கோ அல்லது சுத்தம் செய்வதற்கோ அல்ல.**

*தீ விபத்தின் பின்னர்: பாதுகாப்பாக வீட்டுக்குத் திரும்புதல்* என்ற தகவல் தாள் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது, இத்தகவல் தாளில் உங்களுடைய சொத்திற்குள் மீண்டும் நுழையும் முன்னர் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புக் கருத்துகள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு பாதுகாப்புத் தொகுதியிலும் இருப்பவை:

- உபயோகித்த பின் அப்புறப்படுத்தும் உடல் முழுவதும் மூடும் ஆடை
- உபயோகித்த பின் அப்புறப்படுத்தும் P2 முக மூடி
- வலிமையான கையுறைகள்
- பாவனை செய்த பாதுகாப்பு உபகரணத்தை அகற்றுவதற்கான குப்பை போடும் பை

தகவல் தாள்கள்:

— *தீ விபத்தின் பின்னர்: பாதுகாப்பாக வீட்டுக்குத் திரும்புதல்*

— *தீ விபத்திற்குப் பின்னர்: உங்களுடைய தனிப்பட்ட பாதுகாப்புத் தொகுதியைப் பாவித்தல்.*





## எனக்கு எத்தனை தொகுதிகள் தேவைப்படும்?

பாதுகாப்பு உபகரணம் அகற்றத்தக்கது என்பதாலும், திரும்பப் பாவிக்கக் கூடாது என்பதாலும், சொத்தில் இருக்கும் நேரத்தைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் பல தொகுதிகள் தேவைப்படலாம்.

**முக மூடிகள், உடலை மூடும் ஆடைகள் மற்றும் கையுறைகள் கழற்றப்பட்டு, தூர எறியப்பட வேண்டும்:**

- **வேலையைச் செய்யாமல் ஓய்வெடுக்கும் போதெல்லாம்**
- **சொத்தை விட்டு வெளியேறும் போது**
- **வாகனங்களுக்குள் நுழையும் முன்னர்.**

உங்களுடைய சொத்தை விட்டு வெளியேறும் போது, இலகுவாகச் சுத்தம் செய்யக்கூடிய அல்லது கழுவிக்கொள்ளக்கூடிய வலிமையான காலணியை அணியுமாறு பரிந்துரைக்கிறோம்.

## பாதுகாப்பு உபகரணத்தை உபயோகிக்கும் முறை:

- முகமூடியைப் பொருத்துவது குறித்த வழிகாட்டலுக்காக பக்கம் முழுவதுமுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் - முகமூடிகளால் சரியாக மூடப்படுவதை ஆண்களுக்குள்ள தாடிகளும் மீசைகளும் தடுக்கின்றன என்பதை அறிந்துகொள்க.

உடலை முழுவதும் மூடும் ஆடையை உங்களுடையை உடைக்கு மேலே அணிந்துகொள்ள வேண்டும்.

## பாதுகாப்பு உபகரணத்தை அகற்றுவதற்கு மற்றும் அப்புறப்படுத்துவதற்கு:

- பாவித்த பின் எறியக் கூடிய உடல் முழுதும் மறைக்கும் ஆடைகளை உட்புறம் வெளிப்புறமிருக்குமாறு மாற்றி, பையில் இட வேண்டும்.
- கையுறைகளைக் கழற்றி, பையில் இட வேண்டும்.
- காலணியை எறியாவிட்டால், அதை முழுவதுமாகக் கழுவவும்.
- முகமூடியைக் கடைசியாகக் கழற்றி, பையில் இடவும்.
- முடிச்சுப் போட்டுக் கட்டுவதன் மூலம் பையை இறுக்கமாக மூடவும்.
- எந்தவொரு கழிவு சேகரிப்பு மையத்திலும் பையைத் தூக்கிப்போடவும்.

## மேலும் தகவல்

மேலும் பாதுகாப்புத் தொகுதிகளைப் பெற அல்லது தொகுதியைப் பாவிப்பது பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்களுடைய உள்ளூராட்சிச் சபை அல்லது அவசரநிலை மீட்பு மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.
© விக்ரோரிய மாநிலம், Department of Health and Human Services, ஃபெப்ரவரி 2016.

VICTORIA State Government | Health and Human Services

# P2 அல்லது N95 முகமூடியை எவ்வாறு அணிவது மற்றும் பொருந்தியுள்ளதா என்று சோதிப்பது




Separate the edges of the mask to fully open it




Bend the nose wire to form a gentle curve. The nose wire represents the top of the mask




Hold the mask upside down to expose the two straps




Using your index fingers and thumbs, separate the two straps




While holding the straps, cup the mask under your chin




Pull the straps up and over your head




Place and position the lower strap at the base of your neck (under your ears)




Place the upper strap on the crown of your head so that it runs just above the top of your ears




Gently press the nose wire down across the bridge of your nose until it fits snugly




Continue to adjust the mask and edges until you feel you have achieved a good and comfortable fit

## FIT CHECK

Gently inhale. When you breathe in the mask should draw in slightly toward the face and collapse




**’பொருந்தியுள்ளதைச் சோதித்தல்’ ஆனது P2 அல்லது N95 பிராண்ட் முகமூடிகளை அணியும் ஒவ்வொரு தடவையும் செய்யப்பட வேண்டும்.**




Gently exhale. The mask should fill up with air. It is important at this stage that there is no air leakage around edges of mask.

Follow these directions each time the mask is worn. The masks will not provide the intended level of protection unless worn correctly so it is important that you achieve a good fit as detailed above. Men who are clean shaven will achieve the best facial seal. The brand of P2 or N95 masks may vary slightly so always follow the manufacturer’s instructions and warnings.